


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






38 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 42 சதவீதமாக உயர்வு

# அதிகரிப்பு

## சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்; முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, மே. 18–**

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 38 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 01.04.2023 முதல் 42 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.




இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பெரும்பணியில் தங்களை அர்ப்பணித்து செயல்படும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கினை முழுமையாக உணர்ந்துள்ள இந்த அரசு, அவர்களின் நலனை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, கடந்த அரசு விட்டுச் சென்ற கடும் நிதிநெருக்கடி மற்றும் கடன் சுமை, கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்ட வருவாய் இழப்பு ஆகியவற்றுக்கு இடையேயும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்ற முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

இந்த வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையான அகவிலைப்படி உயர்வு குறித்து கனிவுடன் பரிசீலித்து, இந்த உயர்வினை 01.04.2023 முதல் செயல்படுத்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, தற்போது 38 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 01.04.2023 முதல் 42 சதவீதமாக உயர்த்தப்பட்டு வழங்கப்படும். இதனால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

இந்த உயர்வால் ஆண்டு ஒன்றிற்கு தமிழக அரசுக்கு 2,366.82 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இந்தக் கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

மேலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, எதிர்வரும் காலங்களிலும் ஒன்றிய அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம், உடனுக்குடன் தமிழக அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வைச் செயல்படுத்திடும்." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 25ஆம் தேதி புதுக்கோட்டைக்கு வருகிறார்

## பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்க மாவட்ட நிர்வாகம் ஆயத்தம்

**புதுக்கோட்டை, மே. 18–**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை தொடர்பான முன்னேற்பாடு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தலைமையில் நடைபெற்றது.







புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், இம்மாதம் மே 25ம் தேதியன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புதுக்கோட்டை மாவட்டம் வருகை தரவுள்ளது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்டத்தில் அனைத்துத் துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டுள்ள நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு நேற்று கலந்தாய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தங்கவேல், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் ரேவதி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கருணாகரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மதியழகன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டை சாந்தநாதசுவாமி திருக்கோயிலில் பிரதோஷ வழிபாடு

**புதுக்கோட்டை, மே. 18–**

**புதுக்கோட்டையில் பல்வேறு சிவாலயங்களில் பிரதோஷ விழாவையொட்டி சிறப்பு வழிபாடு நடைபெற்றது நல்ல மழை வேண்டி தண்ணீர் அபிஷேகம் மகாதீபா ஆராதனை நடைபெற்றது.**



புதுக்கோட்டை அருள்மிகு வேதநாயகி உடனுறை சாந்தநாத சுவாமிக்கு பால், தயிர், இளநீர், தேன், சந்தனம், மஞ்சள் நீர் திருநீர் உள்ளிட்ட போன்ற 18 வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டது. மாலையில், நந்திகேஸ்வரருக்கு பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் கலசாபிஷேகம் மற்றும் தீபாராதனை நடந்தது. பின்னர் நந்திகேஸ்வரர் பகவானுக்கு அக்கினியில் நல்ல மழை வேண்டி தண்ணீர் அபிஷேகம் மகாதீபா ஆராதனை நடைபெற்றது.

மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் வருகைதந்து சுவாமியை தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை பிரதோஷ வழிபாட்டு மன்ற அமைப்பாளர் மல்லிகா வெங்கட்ராமன், திருக்கோவில் நிர்வாகிகள் அரிமளம் ரவி சிவாச்சாரியார், காமேஷ் சிவாச்சாரியார், கோயில் ஊழியர்கள் செய்திருந்தனர். இதைப் போல, புதுக்கோட்டை திருக்கோகர்ணம் கோகர்ணேஸ்வரர், நெடுங்குடி கைலாசநாதர் ஆலயம், திருவேங்கைவாசல், நற்சாந்துபட்டி, பனையபட்டி, வலையபட்டி ஆகிய சிவன் ஆலயங்களிலும், பொன்னமராவதி சோழீஸ்வரர் ஆலயம், வேந்தன்பட்டி அருள்மிகு நெய் நந்தீஸ்வரர், இலுப்பூர் பகுதியில் உள்ள சொர்ணாம்பிகை சமதே பொன்வாசி நாதர் வெள்ளாஞ்சார் மீனாட்சி சுந்தரேஸ்வரர், ராப்பூசல் தாயுமானவர், தாண்டீஸ்வரம் சத்குரு சம்ஹாரமூர்த்தி, இலுப்பூர் சொர்ணாம்பிகைசமேத பொன்வாசிநாதர் ஆலத்தூர் தர்மாம்பிகை சமேத அகத்தீஸ்வரர் மற்றும் இலுப்பூரை சுற்றியுள்ள பல்வேறு சிவன் கோயில்களில் உள்ள நந்தி பகவானுக்கு 18 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றன. பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

**புதுக்கோட்டையில் மாபெரும் வேலைவாய்ப்பு நேர்காணல்**

மத்திய அரசின் அங்கீகாரத்துடன் செயல்படக்கூடிய வங்கித்துறை சார்ந்த நிறுவனத்தின் புதிய கிளைகளின் பணி இடத்திற்கான நேர்காணல் நடைபெறவுள்ளன.

❖ ஓய்வு பெற்றோர் ❖ இல்லத்தரசிகள் ❖ பட்டதாரிகள் ❖ VRS பெற்றவர்கள் ❖ NRI ❖ Ex-Service Man உள்ளிட்ட ஆண் / பெண் அனைவரும் வேலை வாய்ப்பில் பங்கேற்கலாம்.

வயது வரம்பு : 30ம் அதற்கு மேல்
Fixed Salary + PF + EPF + ESI & Huge Allowance

கல்வித்தகுதி :
Old SSLC, Xth Std, +2. Any Degree

தேவையான ஆவணங்களின் நகல்கள் :
● ஆதார் கார்டு ●பான்கார்டு ●மார்க்சீட் ●வங்கி பாஸ்புக் முதல் பக்கம் மற்றும் போட்டோ 2

நாள் :
20.05.2023 சனிக்கிழமை
காலை : 10.00 மணி

நேர்காணல் நடைபெறும் இடம் :
ஹோட்டல் சாரதா கிராண்ட்,
ஸ்டேட் பாங்க் அருகில், நானாஸ் காபி பார் எதிரில், கீழராஜ வீதி, புதுக்கோட்டை.

முன்பதிவிற்கு... 94860 59310, 85250 95458



# இன்று

# 18-5-2023

நெல்லிக்காய் மென்று தின்றால் பற்கள் பலமாகும்
சக வருடம் 1945 வைசாகம் 28

| | | |
|---|---|---|
| சோபகிருது வைகாசி 4 | MAY - THU வியாழன் | ஷவ்வால் 27 தேய்பிறை 138 / 227 |

தேய். சதுர்த்தசி 40.38 (மா. 10.08) அசுபதி 04.52 (கா. 07.50) தியாஜ் 29.01 அகஸ் 31.13 அமிர்த 04.52 மேல் சித்த. சுவாமிமலை முருகப் பெருமான் தங்கக் கவசம் அணிந்து வைரவேல் தரிசனம். திருப்போரூர் முருகப் பெருமான் சிறப்பு அபிஷேகம். ஆராதனை செய்ய நன்று. தோஷி தர்ஸ்டே.

| | நல்லநேரம் | கௌ.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.30-11.30 | 12.30-1.30 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ------ | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு ரிஷப லக்கனம் சந்திராஷ்டமம்
பரிகாரம் : தைலம் இருப்பு நா. 4 வி. 18 உத்திரம்
கரணம் : 3-4.30 சூரிய உதயம் : 5.53
ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

**இராசிபலன்**
மேஷம் - பயணம்
ரிஷபம் - விருப்பம்
மிதுனம் - சாதனை
கடகம் - பிரமை
சிம்மம் - களிப்பு
கன்னி - தேர்ச்சி
துலாம் - உயர்வு
விருச்சி - பாராட்டு
தனுசு - உற்சாகம்
மகரம் - ஏமாற்றம்
கும்பம் - கவனம்
மீனம் - லாபம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

" உனது வாழ்க்கைக்கு
ஒரு எல்லை அமைத்து வாழ்
ஆனால் எல்லைக்குள் ஒருபோதும்
வாழ்க்கையை அமைத்து விடாதே "




# "பீதியை ஏற்படுத்தாதீர்கள்" : அமலாக்கத் துறைக்கு உச்ச நீதிமன்றம் வலியுறுத்தல்

புதுடெல்லி , மே. 18 -

"அமலாக்கத் துறை தன் மீது சாமான்ய மக்கள் நம்பிக்கை கொள்ளும்படி நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நியாயமாக நடத்தப்படும் சோதனைகளைக் கூட மக்கள் சந்தேகப்படக் கூடும். எப்போதும் அச்சத்தை ஏற்படுத்தும் சூழலை உருவாக்காதீர்கள். எல்லோருமே குற்றவாளிகள் அல்ல. ஒரு நடவடிக்கைக்கு முன்னர் அங்கே ஏற்கெனவே குற்றம் நடந்ததை உறுதி செய்துகொண்டு களமிறங்குங்கள்" என்று அமலாக்கத்துறைக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. சத்தீஸ்கர் மாநிலம் தொடர்ந்த வழக்கில் தான் உச்ச நீதிமன்றம் இவ்வாறாக தெரிவித்துள்ளது.



சத்தீஸ்கர் மாநிலத்தில் முதல்வர் பூபேஷ் பாகேல் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு மாநில வாணிப கழகம் வாயிலாக மதுபான கொள்முதல், விற்பனை நடைபெறுகிறது. இதன் கட்டுப்பாட்டில் 800 கடைகள் உள்ளன. இங்கு மதுபான விற்பனையில் பெரும் மோசடி நடைபெற்று உள்ளதாக வருமானவரித்துறை கடந்த ஆண்டு வழக்குப்பதிவு செய்தது.

அதன் அடிப்படையில் நடைபெற்ற பண மோசடி தொடர்பாக அமலாக்கத்துறையும் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியது. இந்த வழக்கில் மாநில தொழில் மற்றும் வர்த்தகதுறை செயலாளராக உள்ள மூத்த ஐஏஎஸ் அதிகாரி அனில் துதேஜா உள்ளிட்ட சிலர் மீது புகார் கூறப்பட்டது. இந்நிலையில் அமலாக்கத்துறை முதல்வருக்கு களங்கம் விளைவிக்கும் ஒரே நோக்கத்தில் இந்த வழக்கைக் கையாள்வதாக மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், அசானுதீன் அமனுல்லா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மாநில அரசு சார்பில் ஆஜரன மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், "இந்த வழக்கில் சத்தீஸ்கரைச் சேர்ண்டஹ் 52 அதிகாரிகள் தாங்கள் அமலாக்கத்துறையால் அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கும்படி வற்புறுத்தப்பட்டதாகக் கூறியுள்ளனர். முதல்வர் மற்றும் மூத்த அமைச்சர்களுக்கு எதிராக வாக்குமூலம் தரும்படி நிர்பந்திக்கப்பட்டதாகக் கூறியுள்ளனர். அமலாக்கத் துறையின் நிஜமான இலக்கு முதல்வர் தான். ஊழல் வழக்குகளை மாநில அரசு கையாளும் அதிகாரம் இருக்கையில் அந்த உரிமையை மீறி அமலாக்கத்துறை செயல்படுகிறது" என்று வாதிட்டார். தொடர்ந்து கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் தனது வாதங்களை முன்வைத்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள்"அமலாக்கத்துறை தன் மீது சாமான்ய மக்கள் நம்பிக்கை கொள்ளும்படி நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நியாயமாக நடத்தப்படும் சோதனைகளைக் கூட மக்கள் சந்தேகப்படக் கூடும். எல்லோருமே குற்றவாளிகள் அல்ல. ஒரு நடவடிக்கைக்கு முன்னர் அங்கே ஏற்கெனவே குற்றம் நடந்ததை உறுதி செய்துகொண்டு களமிறங்குங்கள். ஒருவேளை ஊழல் நடந்திருந்தால் சரியான நபரைப் பிடியுங்கள். அதைவிடுத்து அச்சமான சூழலை உருவாக்காதீர்கள்" என்று அறிவுறுத்தினர்.

அரியலூரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கோடைக்கால பயிற்சி முகாமில்

# மாணவ, மாணவிகளுக்கு கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி சான்றிதழ் வழங்கினார்

அரியலூர், மே. 18 -

அரியலூரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கோடைகால பயிற்சி முகாமில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு கலெக்டர் ரமண சரஸ்வதி சான்றிதழ் வழங்கினார்.



அரியலூர் மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அரியலூர் மாவட்டத்தின் சார்பாக, மாவட்ட அளவிலான இலவச கோடைகால பயிற்சி முகாம், அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் 01.05.2023 முதல் 15.05.2023 வரை, நாள்தோறும் காலை 6.30 மணி முதல் 8.30 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரையிலும் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில், கைப்பந்து, தடகளம், கூடைப்பந்து, ஹாக்கி, கால்பந்து, கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களைக்கொண்டு நடத்தப்பட்டது. அந்த வகையில் மாவட்ட அளவிலான இலவச கோடைக்கால பயிற்சி முகாமில்பங்கேற்றமாணவ, மாணவிகளுக்கு,அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில், சான்றிதழ் மற்றும் பனியன்களை கலெக்டர் பெ. ரமண சரஸ்வதி வழங்கினார். பயிற்சிமுகாமில் அரியலூர் மாவட்டத்திலுள்ள அரசு உயர்நிலை பள்ளி, மேல்நிலைப்பிள்ளி, மெட்ரிக்ஃ உயர்நிலை பள்ளி, மேல்நிலைப்பிள்ளி, நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர் மற்றும் மாணவரல்லாத மாணவர்கள், மாணவிகள், விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள் என 160 மாணவர்களும், 84 மாணவிகளும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் ந.லெனின், அரியலூர் ஆர்.டி.சி குழுமம் ஜாபர், அரியலூர் ஏ எஸ் மருத்துவமனை டாக்டர்.முகம்மதுரியாஸ், மற்றும் பயிற்றுநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.




# ராமநாதபுரம்-சிவகங்கை மாவட்டங்களில் கலெக்டர்கள் ஆன தம்பதிகள்

சென்னை, மே. 18 -

தமிழகத்தில் 16 மாவட்டங்களுக்கு கலெக்டர்கள் புதிதாக நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் 16 மாவட்டங்களுக்கு கலெக்டர்கள் புதிதாக நியமிக்கப் பட்டுள்ளார்கள். இதில் ராமநாதபுரம் கலெக்டராக விஷ்ணுசந்திரனும், சிவகங்கை மாவட்ட கலெக்டராக ஆஷா அஜித்தும் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் கணவன்-மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. இருவரும் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தை சேர்ந்தவர்கள். இவர்களுக்கு 3 வயதில் பத்மா என்ற பெண் குழந்தை உள்ளது. இருவரும் கணவன்-மனைவி மற்றும் சின்ன குழந்தையும் இருப்பதால் பக்கத்து பக்கத்து மாவட்டங்களில் பணியாற்றும் வகையில் இவர்களை அரசு நியமித்துள்ளது.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான இருவரும் தமிழகத்தில் பணியமர்த்தப் பட்டார்கள். முதலில் தேவகோட்டை சப்-கலெக்டராக ஆஷா அஜித்தும், பரமக்குடி சப்-கலெக்டராக விஷ்ணுசந்திரனும் பணியாற்றினார்கள். நாகர்கோவில் மாநகராட்சி கமிஷனராக ஆஷா அஜித் பணியாற்றிய



போது விஷ்ணுசந்திரன் நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பணியாற்றினார்.

கலெக்டராக நியமிக்கப்பட்டுள்ள ஆஷா அஜித் கூறியதாவது:- நாங்கள் இருவருமே முதல் முறையாக கலெக்டர் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளோம். இது மிகுந்த மகிழ்ச்சியை தருவதோடு எங்கள் பொறுப்பையும் அதிகமாக்கி இருக்கிறது. எங்களை போன்று பல தம்பதிகள் உயர் அதிகாரிகளாக பணிபுரிகிறார்கள். குடும்பம் நடத்துவதை இருவரும் சிரமமாக கருதுவதில்லை. பக்கத்து பக்கத்து மாவட்டங்களில் பணிபுரிவதால் அவசர தேவைகளுக்கு இருவரும் எளிதாக சந்தித்து கொள்ள முடியும். அரசு நம்பி பொறுப்பை ஒப்படைத்துள்ளது. அந்த நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் சிறப்பாக பணியாற்றுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# திமுக ஆட்சியில் அரசு அதிகாரிகள் மிரட்டப்படுவது தொடர்கிறது அண்ணாமலை குற்றச்சாட்டு

சென்னை , மே. 18 -

" திறனற்ற திமுக ஆட்சியில், அரசு அதிகாரிகள் மிரட்டப்படுவது தொடர்கிறது" என பாஜக தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி உள்ளார்.



இது குறித்து பாஜக தலைவர் அண்ணாமலை தனதுட்விட்டர்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்," கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் இந்திராவை, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் தனபால் என்பவர், தகாத வார்த்தைகளால் பேசி, கை காலை வெட்டுவேன் என்று மிரட்டல் விடுத்திருக்கிறார்.

அனுமதி இல்லாமல் அமைத்த கொடிக் கம்பத்தை அகற்ற வேண்டும்எனஉத்தரவிட்ட பெண் வட்டாட்சியரை, காவல்துறை முன்னிலையில் பகிரங்கமாக மிரட்டல் விடுக்கும் தைரியம் எங்கிருந்து வந்தது?


திறனற்ற திமுக ஆட்சியில், அரசு அதிகாரிகள் கொலை செய்யப்படுவதும், மிரட்டப்படுவதும் தொடர்கிறது. நடப்பது மக்களுக்கான ஆட்சியா அல்லது சமூக விரோதிகளுக்கான ஆட்சியா?

உடனடியாக, பெண் அதிகாரிக்கு மிரட்டல் விடுத்த நபர்களைக் கைது செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அரசு அதிகாரிகளுக்கான பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்றும் திமுக அரசைவலியுறுத்துகிறேன்." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# 2 ஆண்டுகள் பயன்படுத்தப்படாமல் இருக்கும் கணக்குகளை நீக்கும் கூகுள்

கலிபோர்னியா , மே. 18 -

கூகுள் கணக்கு வைத்துள்ள பயனர்கள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அதனை பயன்படுத்தாமல் இருந்தால் அவற்றை நீக்க கூகுள் திட்டமிட்டுள்ளது. 'இன்-ஆக்டிவ் அக்கவுண்ட்ஸ்' சார்ந்த கொள்கை முடிவில் கூகுள் தரப்பில் மேற்கொண்டுள்ள மாற்றம் இதற்கு காரணம் என தெரிகிறது.



இதன் மூலம் பயனர்கள் தங்கள் கூகுள் கணக்குகளை 24 மாதத்திற்கு ஒரு முறையேனும் லாக்-இன் செய்து ரிவ்யூ செய்ய வேண்டும். அதை செய்யாத பயனர்களின் கணக்குகள் நீக்கப்படும் என தெரிகிறது. இதற்கு முன்னர் இன்-ஆக்டிவாக இருக்கும் பயனர் கணக்குகளில் இருக்கும் டேட்டாவை (தரவுகள்) மட்டுமே கூகுள் நீக்கி வந்தது. இப்போது கணக்கையே மொத்தமாக நீக்க உள்ளது.

இதன் காரணமாக ஜிமெயில், டாக்குமெண்ட், டிரைவ், காலண்டர், யூடியூப் மற்றும் கூகுள் போட்டோ என பயனர்கள் ஒரே நேரத்தில் பல தளங்களின் தரவுகளை இழக்க நேரிடும். 'ரிஸ்கை குறைக்கும் வகையில் இந்த கொள்கை கொண்டுவரப் பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதி முதல் 2 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தாமல் உள்ள கூகுள் கணக்குள் நீக்கப்படும்' என கூகுள் வலைப்பூவில் தெரிவித்துள்ளது.

இந்த இடைப்பட்ட நேரத்தில் பயன்படுத்தாமல் உள்ள கணக்குகள் மற்றும் அதோடு தொடர்புடைய கணக்குகளுக்கு இது குறித்த விவரத்தை கூகுள் தெரிவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# "பழைய சம்பவங்களை திரும்பிப் பாருங்கள்" கர்நாடகா விவகாரத்தில் பாஜக விமர்சனத்திற்கு காங்கிரஸ் பதிலடி

புதுடெல்லி , மே. 18 -

கர்நாடகாவின் அடுத்த முதல்வரை தேர்ந்தெடுப்பதில் இழுபறி நீடித்துவரும் நிலையில், அதுகுறித்த பாஜகவின் விமர்சனத்திற்கு,"பழைய சம்பவங்களைத் திரும்பிப் பாருங்கள்" என்று காங்கிரஸ் கட்சி நேற்று (புதன்கிழமை) பதிலடி கொடுத்துள்ளது.



இதுகுறித்து காங்கிரஸ் எம்.பி.யும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான ஜெய்ராம் ரமேஷ் தனது ட்விட்டர் பக்கத்தில்," குறிப்பாக பிரதமரின் முரசறைபவர்களின் ஞாபகத்திற்காக இது. 2017-ம் ஆண்டு உத்தரப் பிரதேச சட்டப்பேரவை முடிவுகள் வெளியானது மார்ச் 11-ம் தேதி. யோகி ஆதித்யநாத் 8 நாட்கள் கழித்து மார்ச் 19-ம் தேதிதான் முதல்வராக நியமிக்கப்பட்டார்.

2021-ம் ஆண்டு அஸ்ஸாம் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியானது மே 3-ம் தேதி, ஹிமந்த பிஸ்வா சர்மா 7 நாட்கள் கழித்து மே 10-ம் தேதி தான் முதல்வராக நியமிக்கப்பட்டார். இதுபோல இன்னும் நிறைய உதாரணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கர்நாடகா தேர்தல் முடிவுகள் கடந்த சனிக்கிழமை (மே 13) அறிவிக்கப்பட்டு காங்கிரஸ் கட்சி தனிப்பொரும்பான்மை பெற்றும், அங்கு அடுத்த முதல்வரை தீர்மானிப்பதில் இழுபறி நிலவி வருகிறது. முதல்வர் பதவிக்கு சித்தராமையா, டிகே சிவகுமார் இருவரிடையே வெளிப்படையாக கடுமையான போட்டி நிலவி வருகிறது.

இதுகுறித்து பல பாஜக தலைவர்கள் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர். அக்கட்சியின் ஐடி பிரிவு தலைவர் அமித் மாளவியா இதுகுறித்து தனது ட்விட்டர் பக்கத்தில்,"காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தன்னை ஒரு தபால்காரராக கருதும் நிலை அக்கட்சியில் நிலவி வருகிறது. நீங்கள் சர்க்கஸ் பார்க்க வேண்டுமா? காங்கிரஸ் கட்சி அவர்களின் கர்நாடகா முதல்வரைத் தேர்ந்தெடுப்பதை பாருங்கள்" என்று தெரிவித்திருந்தார்.

மேலும் "இப்படிபட்டச் சூழ்நிலையில், தலைவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வது, தனக்கான ஆதரவினைத் திரட்டுவது, ஊடகங்களின் வாயிலாக கட்சிக்கு மிரட்டல் விடுவது போன்றவைகளை பாஜகவில் ஒருபோதும் பார்க்க முடியாது" என்று தெரிவித்திருந்தார்.

# கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்தபோது 3 பேர் உயிரிழந்த விவகாரம் தமிழ்நாடு அரசுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ்

சென்னை , மே. 18 -

கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்தபோது 3 பேர் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அரசுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.




கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் அருகே உள்ள கானூர் மாஞ்சோலையை சேர்ந்தவர் பிச்சமுத்து மகன் கிருஷ்ணமூர்த்தி (வயது 40). இவரது மனைவி காயத்ரி (35). இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். தச்சு வேலை பார்த்து வந்த கிருஷ்ணமூர்த்தியுடன் சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள தலைவாசலை சேர்ந்த அவரது மாமா மகன் சக்திவேல் (22) என்பவரும் தங்கி இருந்து தச்சு வேலை செய்து வந்தார். இந்த நிலையில் கிருஷ்ணமூர்த்தி அதே பகுதியில் தற்போது புதிதாக வீடு கட்டி வருகிறார். இதில் கானூரை சேர்ந்த கொத்தனார் பாலச்சந்திரன் (32) என்பவர் வீடு கட்டும் பணியில் ஈடுபட்டு வந்தார். மேலும் வீட்டின் அருகே கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு செப்டிக் டேங்க் கட்டப்பட்டது. இதில் செப்டிக் டேங்க் மேற்பகுதியில் கான்கிரீட் போடுவதற்காக, செப்டிக் டேங்க் குழிக்குள் சாரம் அமைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சாரத்தை அகற்றுவதற்காக கடந்த 12-ம் தேதி கிருஷ்ணமூர்த்தி, பாலச்சந்திரன், சக்திவேல் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக செப்டிக் டேங்க் மேற்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறிய துளை வழியாக உள்ளே இறங்கினர். செப்டிக் டேங்க் குழிக்குள் இறங்கிய மூன்று பேரும் நீண்ட நேரம் ஆகியும் வெளியே வராததால் அதிர்ச்சி அடைந்த கிருஷ்ணமூர்த்தியின் தாய் சரஸ்வதி குழிக்குள் எட்டிப் பார்த்தார். அப்போது 3 பேரும் விஷ வாயு தாக்கி உயிரிழந்தனர். இதுகுறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். 3 பேர் விஷவாயு தாக்கி பலியான சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்தபோது 3 பேர் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அரசுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதுபோன்ற மரணங்கள் நிகழாமல் தடுக்க மாநில அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும், உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட நிவாரணம் குறித்தும் 4 வாரத்தில் அறிக்கை அளிக்க தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

# ஆலங்குடி அருகே 1100 லி சாராய ஊறல் அழிப்பு



ஆலங்குடி, மே.18-

செங்கல்பட்டு, மரக்காணம் பகுதிகளில் விஷச்சாராய இறப்புகள் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் தமிழ்நாடு முழுவதும் சாராயம் அழிப்பு பணியை காவல்துறையினர் தொடங்கியுள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் கருக்காக்குறிச்சி கிராமத்தில் பலர் தொடர்ந்து சாராயம் காய்ச்சி விற்பனை செய்வதை அறிந்து நேற்று மாவட்ட எஸ்பி வந்திதா பாண்டே உத்தரவின் பேரில் சாராய ஊறல்கள் அழிக்கப்பட்டது.

அதே போல ஆலங்குடி டிஎஸ்பி தீபக்ரஜினி குழுவினர் மற்றும் வடகாடு போலிசார், ஆலங்குடி மதுவிலக்கு போலிசார் கொண்ட தனிப்படை போலிசார் கரு தெற்கு தெருவில் ஒரு தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த பேரல்களை தோண்டி எடுத்து 1100 லிட்டர் சாராய ஊறல்களை அழித்து பேரல்களை அதே இடத்தில் தீ யிட்டு எரித்தனர், கள்ளச் சாராயம் காய்ச்சும் சம்பவத்தில் ஈடுபட்ட சிலரை போலிசார் கைது செய்துள்ளனர்.

டாஸ்மாக் சரக்கு தடையின்றி கிடைத்தாலும் கூட கருக்காகுறிச்சி பகுதியில் தொடர்ந்து கள்ளச் சாராயம் விற்பனையும் தடையின்றி நடந்து வருவது வேதனை அளிக்கிறது, மேலும் தற்போது ஒரு லிட்டர் சாராயம் ரூ.500 க்கு விற்பனை செய்வதாக கூறும் சிலர் பணத்தை கூகுல் பே போன்ற ஆன்லைன் பண பறிமாற்றமும் நடப்பதாக கூறுகின்றனர்.

# ஊராட்சி ஒன்றியத்தில் "நம்ம ஊரு சூப்பர்" விழிப்புணர்வு நிகழ்ச்சி

செங்கல்பட்டு, மே. 18 -

செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பேர்கண்டிகை கிராமத்தில் நம்ம ஊரு சூப்பர் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர் தலைமையில் நடைபெற்றது.



இதில் சிறப்பு விருந்தினராக ஒன்றிய தலைவர் கண்ணன், ஒன்றிய கவுன்சிலர் பார்த்தசாரதி, வட்டார ஒருங்கிணைப்பாளர் ரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டு தனிநபர் கழிவறையை பயன்படுத்துவோம், சுற்றுப்புறத்தை தூய்மையாக காப்போம், அதிக அளவில் மரம் வளர்த்து கிராமத்திற்கு பெருமை சேர்ப்போம் என தூய்மை குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைத்தனர்.

இதனைத் தொடர்ந்து "தங்கள் கிராமம் எழில் மிகு கிராமம்" என உறுதிமொழி ஏற்றனர். மேலும் தூய்மை காவலர்களுக்கு உபகரணங்கள், தூய்மை வாகனங்கள் மற்றும் தூய்மை குறித்த விழிப்புணர்வு பேரணி ஆகியவை நடைபெற்றது.

# தென்காசி மாவட்ட திமுக தொண்டர் அணி நிர்வாகிகள் நியமனம்: மாவட்ட செயலாளரிடம் வாழ்த்து



தென்காசி, மே,18–

தென்காசி தெற்கு மாவட்ட திமுக தொண்டர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில் புதிய நிர்வாகிகள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவ பத்மநாதனை சந்தித்து வாழ்த்து பெற்றனர்,தென்காசி தெற்கு மாவட்ட திமுக தொண்டர் அணி அமைப்பாளராக கொட்டாகுளம் இ.இசக்கி பாண்டியன் தொண்டரணி தலைவராக கீழப்புலியூர் மிலிட்டரி வெங்கடேசன், துணைத் தலைவராக ஆழ்வார் குறிச்சி சைலப்பன், துணை அமைப்பாளர்களாக கல்லூத்து பொன் வேல்ராஜ், கழநீர்குளம் எம்சிவராஜ் பாண்டியன், துவரங்காடு எம்.முருகன், மருக்காலங்குளம் விஜயராஜ், வெய்க்காலிபட்டி வி.ஆர். ராஜேஷ், ஆவுடையானூர் வி.சுப்பிரமணியன், குற்றாலம் ஏ.சுரேஷ் ஆகியோர் திமுக மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன் பரிந்துரைபடி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக திமுக மாநில தொண்டர் அணி செயலாளர் பெ.சேகர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் தென்காசிதெற்குமாவட்ட திமுக தொண்டர் அணி அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள கொட்டாகுளம் இசக்கி பாண்டியன் மற்றும் தொண்டரணி நிர்வாகிகள் , கீழப்புலியூர் மிலிட்டரி வெங்கடேசன், துணைத்தலைவர் ஆழ்வார் குறிச்சி வே.சைலப்பன், துணை அமைப்பாளர்கள் கல்லூத்து பொன். வேல்ராஜ், கழநீர்குளம் எம்.சிவராஜ் பாண்டியன், துவரங்காடு எம்.முருகன், மருக்காலங்குளம் விஜயராஜ், வெய்க்காலிபட்டி வி.ஆர். ராஜேஷ், ஆவுடையானூர் வி.சுப்பிரமணியன், குற்றாலம் ஏ.சுரேஷ், ஆகியோர் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்ம நாதனை சந்தித்து கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்து பெற்றனர்.

# புதுக்கோட்டையில் நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை ரத்துசெய்யக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, மே.18–

விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கும் மிகுந்த கேட்டை விளைவிக்கும் நில ஒருங்கிணைப்பு சட்டம் 2023–ஐ திரும்பப்பெற வலியுறுத்தி விவசாயிகள் சங்கங்களின் சார்பில் புதுக்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை திலகர் திடலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் மாவட்டச் செயலாளர்கள் ஏ.ராமையன், எஸ்.சி.சோமையா ஆகியோர் தலைமை வகித்தனர், ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலாளர் த.இந்திரஜித் உரையாற்றினார், விவசாயத் தொழிலாளர் சங்க மாநில செயலாளர் எஸ்.சங்கர் நிறைவுரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எஸ். பொன்னுச்சாமி மற்றும் நிர்வாகிகள் த.செல்வராஜ், எம்.பாலசுந்தரமூர்த்தி, ஏ.எல்.ராசு, த.அன்பழகன், எஸ்.நாராயணசாமி, க.சுந்தர்ராஜன், டி.அம்பலராஜ், மாரக்கண்டேயன் உள்ளிட்டோர் பேசினர்.

நிலம், நீர் நிலைகளை பெரும் தொழில் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கும் நில ஒருங்கிணைப்பு சட்ட மசோதவை திரும்பப்பெற வேண்டும், உணவில் அரிசியோடு செறிவூட்டப்பட்ட அரிசியை கலப்பதை உடனடியாக கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட முழங்கங்கள் ஆர்ப்பாட்டத்தின் போது எழுப்பப்பட்டன.

# அரசியல்வாதிகளையும், அதிகாரிகளையும் நம்ப வேண்டாம் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ பேச்சு





திருவள்ளூர், மே, 18 –

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே தொம்பரம்பேடு கிராமத்தில் ஆறு வழிச்சாலை எதிர்ப்பு இயக்கம் சார்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ கலந்து கொண்டு அரசியல்வாதிகளையும், அதிகாரிகளையும், எக்காரணம் கொண்டும் மக்கள் நம்ப வேண்டாம் அவர்கள் உங்களை முட்டாள்கள் ஆக்கி, உங்களுடைய ஓட்டுக்களை வாங்கிக் கொண்டு, உங்களுக்கு துரோகம் செய்வார்கள் என்றுபேசினார்.

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், தச்சூர் முதல் ஆந்திர மாநிலம் சித்தூர் வரை 116 கி.மீ. தூரம் வரை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ஆறு வழிச்சாலை அமைக்கும் பணிகள்நடைபெற்றுவருகிறது. அதற்காக திருவள்ளூர் மாவட்டத்தில் சுமார் 1,238 ஏக்கர் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப் படுகின்றது. இதில், ஊத்துக்கோட்டை, பள்ளிப்பட்டு, சித்தூர் ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகளின்நிலங்கள்,ஏரிகள், குளங்கள் உள்ளிட்டவைகள் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், வருவாய் துறை அதிகாரிகள் கையகப்படுத்தினர்.

ஆனால் நிலத்தின் உரிமையாளர்களுக்கு போதிய அளவு இழப்பீடு தொகை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருப்பினும், இச்சாலை அமைக்கும் பணி கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தும் நடைபெற்று வருகிறது. இருப்பினும், விவசாயிகள் தொடர்ந்து பல்வேறு கட்ட போராட்டங்கள் மூலம் தங்களது எதிர்ப்பை தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில்,நேற்று ஆறு வழிச்சாலை எதிர்ப்பு இயக்கம் சார்பாக தொம்பரம்மேடு கிராமத்தில் ஆலோசனை கூட்டம் விவசாயி ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விவசாயிகளின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

இதன் பின்னர் அவர் பேசியபோது, இந்த ஆறு வழிச்சாலையை தடுத்து நிறுத்த விவசாயிகள் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தற்காலிக தடை உத்தரவு வாங்க வேண்டும் என்றும், அதற்கு விவசாயிகள் அனைவரும் ஒன்றிணைந்து முன்வர வேண்டும் என்றும் கூறினார். மேலும், அரசியல்வாதிகளையும், அரசு அதிகாரிகளையும் எக்காரணம் கொண்டும் நம்ப வேண்டாம், அவர்கள் உங்களை முட்டாளாக்குவார்கள், துரோகம் செய்வார்கள், உங்களுடைய ஓட்டுக்களை வாங்கிக் கொண்டு உங்களை ஏமாற்றுவார்கள் என்று காட்டமாக பேசினார்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் சசிகுமார், விஜயபிரசாத், எஸ்.எம். ஹரிதாஸ், பலராமன், ரவி, சிவப்பிரகாசம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கடலில் குளித்த இரண்டு கல்லூரி மாணவர்கள் உட்பட மூன்று மாணவர்கள் ராட்சத அலையில் சிக்கி உயிரிழப்பு







திருவொற்றியூர், மே, 18 –

சென்னையில் நாளுக்கு நாள் வாட்டி வதைத்து வரும் வெப்பத்தை சமாளிக்க பொதுமக்கள் மாலை நேரங்களில் கடற்கரை, பூங்கா என குளிர்ச்சியான பொழுதுபோக்கு இடங்களில் தஞ்சமடைந்து பொழுதை கழித்து வருகிறார்கள்.

திருவொற்றியூர் சதானந்த புரத்தை சேர்ந்த கல்லூரி மாணவரான 18 வயதுடைய சந்துரு, அவருடைய தம்பி பத்தாம் வகுப்பு மாணவரான 16 வயதுடைய ஹரீஷ் பொன்னேரியில் தனியார் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கும் ஸ்ரீகாந்த் (20) மற்றும் ஏழு நண்பர்களுடன் திருவொற்றியூர் சுதந்திரபுரம் கடற்கரையில் குளித்து கொண்டிருந்தினர்.

கடலில் குளித்துக் கொண்டிருந்த மாணவர்களை ராட்சத அலை இழுத்துச் சென்றது. இதில் ஹரிஸ், ஸ்ரீகாந்த், சந்துரு ஆகிய மூன்று பேரை கடல் அலை இழுத்துச் சென்றது.

உடனடியாக கூச்சலிட்ட நண்பர்களால் அருகில் இருந்த மீனவர்கள் கடலுக்குள் இறங்கி ஹரிஷ், ஸ்ரீகாந்த் என்ற இருவரை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். ஆனால் அவர்கள் மூச்சு பேச்சு இல்லாமல் இருந்ததால் இரண்டு பேரையும் உடனடியாக சிகிச்சைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். மேலும் ராட்சத அலையில் சிக்கி கடலில் மாயமான கல்லூரி மாணவன் சந்துருவை திருவொற்றியூர் தீயணைப்பு துறையினர் மற்றும் மீனவர்கள் தேடிவந்த நிலையில் நேற்று காலை சந்துருவின் உடல் சடலமாக கரை ஒதுங்கியது.

இவர்களில் ஹரிஷ் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி உள்ளார். ஸ்ரீகாந்த் பொன்னேரியில் உள்ள கல்லூரியில் 3 ஆம் ஆண்டு படித்து வந்தார். ஸ்ரீகாந்த் பி.காம் இறுதி ஆண்டு தேர்வு எழுதி முடித்துவிட்டு ஐஏஎஸ் படித்து, தேர்வு எழுதி கலெக்டராக வேண்டும் என ஆசையில் இருந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். மேலும் சடலமாக மீட்கப்பட்ட சந்துரு சூளைமேடு செங்கல்வராயன் தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு பி.காம் படித்து வந்தார்.

சுட்டெரிக்கும் வெப்பத்தை சமாளிப்பதற்காக ஆபத்தை உணராமல் இளைஞர்களும், மாணவர்களும்கடலில் இறங்கி குளித்து வரும் நிலையில், வானிலை மாற்றத்தினால் ராட்சத அலையில் சிக்கி 3 மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

தாங்கல் சதானந்தபுரத்தை சேர்ந்த ராஜேஷ் என்பவரின் மகன்களான ஹரீஷ், சந்துரு ஆகிய இரண்டு பேரும் கடல் அலைகளில் சிக்கி ஒரே குடும்பத்தில் அண்ணன், தம்பி இருவரும் உயிரிழந்தது அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஜிப்சி இனப் பெண்கள், குழந்தைகளுடன் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சந்திப்பு



காரைக்கால், மே, 18 –

காரைக்கால் வடக்கு கோவில்பத்தில் வசிக்கும் நரிக்குறவர் இனப் பிள்ளைகளுக்கு அவர்களது வாழ்விடத்திற்கே சென்று திருக்குறள் எழுத ஒரு வாரம் பயிற்சி அளித்தார் காரைக்கால் சேர்ந்த கனகவள்ளி. மேலும் அரசு பள்ளிகளில் மிகையான சலுகைகள் கிடைப்பதால் பள்ளி இடைநிற்றலை தவிர்த்து அனைவரும் தொடர்ந்து கல்வி கற்றிட வேண்டும் என்றும் கல்வியின் அவசியத்தையும் அவர்களுக்கு உணர்த்தினார்.

இதனை ஒரு சாதனை முயற்சியாக சாமானியர்களும் சாதிக்கலாம் என்ற நோக்கத்தோடு ஜிப்சி இன பிள்ளைகளை திருக்குறளை தேசிய நூலாக வலியுறுத்த வேண்டி தபால் கார்டில் திருக்குறளை எழுத வைத்து பள்ளி இடைநிற்றலை தவிர்த்து தொடர்ந்து கல்வி பயின்றிடவும் வேண்டி அனைவரும் கற்போம், அனைவரும் உயர்வோம் என்ற வாசகத்தையும் ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் மற்றும் சேவை ரெக்கார்ட் ஃபோரம் தலைவர் வெங்கடேசன் தலைமையிலும், கண்காணிப்பாளர் கலைவாணி முன்னிலையிலும், சாதனை முயற்சி மேற்கொண்டனர்.

இவர்களுக்கு திருக்குறள் சுடர் விருது அறிவிக்கப்பட்டு நேற்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நரிக்குறவர் இனப் பிள்ளைகளுக்கு இவ்விருதை வழங்கினார். மேலும் மாவட்ட ஆட்சியரிடம் ஜிப்சி இனப் பெண்கள் மற்றும் பிள்ளைகள் தங்களுக்கு தங்குவதற்கு வீடு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்றும், தங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகள் தூரமாக இருப்பதால் பள்ளிக்கு சென்று வர வாகன வசதி செய்து தர வேண்டும் என்றும், மேலும் சில அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை வைத்தார்கள். மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்களிடம் கூறினார். இந்நிகழ்வில் கனகவள்ளி உடன் இருந்தார்.

# கள்ளச்சாராயம் விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியர் ஆலோசனை



காரைக்கால், மே, 18 –

தமிழகத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு விஷ சாராயம் அருந்தி பல பேர் உயிரிழந்த நிலையில் நேற்று காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியர் ஜான்சன் தலைமையில் காரைக்கால் எல்லைப் பகுதிகள் மற்றும் அனைத்து இடங்களிலும் உள்ள மதுபான கடைகள், சாராயக்கடைகள், கள்ளுக்கடைகள் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக காரைக்காலில் அமைந்துள்ள 25 சாராயக்கடைகளின் நிர்வாகிகளை அழைத்து துணை மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் துணை மாவட்ட ஆட்சியர் கூறுகையில், மொத்தமாக யாருக்கும் மதுபானங்கள் தரக்கூடாது என்றும், அரசு விதிமுறையை பின்பற்றி தர வேண்டும், மேலும் சாராயம் கடத்துவதில் யாரும் ஈடுபடக்கூடாது. அப்படி யாராவது கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டால் மாவட்ட நிர்வாகத்திற்கு தாங்கள் தகவல் அளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

18 வயதிற்கு குறைவானவர்களுக்கு மதுபானம் தரக்கூடாது என்றும் இதை பலகையில் எழுதி கடைக்கு வெளியே வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பிளாஸ்டிக் மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்களை உபயோகிக்க கூடாது என்றும் கடைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிபந்தனைகளை பின்பற்ற தவறினால் அபராதம் விதிக்க நேரிடும் எனவும் எச்சரித்தார். மேலும் இந்த மாதத்திற்குள் கிஸ்திகளை பாக்கி வைத்திருப்பவர்கள் கட்ட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் வட்டாட்சியர்கள் மதன்குமார் மற்றும் சண்முகானந்தம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கந்தர்வக்கோட்டை அருகே அரசு பள்ளியில் மாணவர்களை சேர்க்க விழிப்புணர்வு பேரணி




கந்தர்வகோட்டை, மே.18–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் சுந்தம்பட்டி ஊராட்சி இல்லம் தேடி கல்வி மையத்தின் சார்பில் அரசு பள்ளியில் மாணவர்களை சேர்க்க பெற்றோர்களிடம் விழிப்புணர்வு பேரணியை தலைமை ஆசிரியர் கலையரசி தொடங்கி வைத்தார். இல்லம் தேடி கல்வி மைய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா ஒருங்கிணைத்தார்,

வானவில் மன்ற கருத்தாளர் தெய்வீக செல்வி முன்னிலை வகித்தார்.

மாணவர் சேர்க்கை பேரணியில்பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளியில் சேர்க்க வேண்டும் எனவும், அரசு பள்ளியில் செயல்படுத்தி வரும் இல்லம்தேடி கல்வி திட்டத்தின்மூலம்மாலை நேரத்தில் மாணவர்கள் கொரோனா காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்புகளை சரி செய்யக்கூடிய பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்றும், அரசு பள்ளிகளில் கல்வி இணை செயல்பாடுகளான மன்ற செயல்பாடுகள் மூலம் மாணவர்களுக்கு வெளிநாடு சுற்றுலா செல்ல வாய்ப்புகள் வழங்கப்படுகிறது.

காலை உணவு திட்டம், அரசு பள்ளியில் பயின்றால் 20% அரசு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை, உயர்கல்விகள் 7.5% இட ஒதுக்கீடு, பெண்களுக்கு இலவச உதவி தொகை, மாதந்தோறும்தேன்சிட்டு, ஊஞ்சல் சிற்றிதழ்கள், கண்ணொளி திட்டம், ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை எண்ணும் எழுத்தும் திட்டம், விலையில்லா வண்ண சீருடைகள், காலணிகள், விலையில்லா பாட புத்தகங்கள், நோட்டுகள் உள்ளிட்டவை அரசு பள்ளிகளில் வழங்கப்படுகிறது. தங்களுடைய குழந்தைகளை அரசு பள்ளியில் சேருங்கள் என்று பெற்றோர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் தன்னார்வலர்கள் உமா ,காளியம்மாள், ராஜலட்சுமி, சித்ரா, காஞ்சனா, ஷாலினி, பானுமதி, புவனேஸ்வரி, வான்மதி, முருகேஸ்வரி, செந்தமிழ் லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தார் சாலையை புதுப்பிக்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் தென்காசி எம்எல்ஏ கோரிக்கை மனு



தென்காசி மே 18

தென்காசி மாவட்டம், கருவந்தா மற்றும் அச்சங்குட்டம் ஊராட்சியில் பழுதான தார் சாலையை புதுப்பிக்க கோரி தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை ரவிச்சந்திரனிடம், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனி நாடார் கோரிக்கை மனுவினை அளித்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது, எனது தென்காசி தொகுதியில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருவந்தா கிராமத்தில் இருந்து ரதமுடையார்குளம் வரை செல்லும் தார் சாலை அச்சங்குட்டம் ஊராட்சியில் மாடர்ன் கோவில் முதல் வீ.கே புதூர் செல்லும் சாலை மற்றும் யோவான் நாடார் கோவில் தெரு முதல் குறிச்சான் பட்டி செல்லும் சாலை பல ஆண்டுகளாக மிகவும் பழுதடைந்து உள்ளது.

இதனால் பொதுமக்களின் போக்குவரத்துக்கு மிகவும் சிரமம் ஏற்படுவதால் பல நேரங்களில் விபத்துகள் ஏற்படுகின்றன, ஆதலால் தாங்கள் போர்க்கால அடிப்படையில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருவந்தா மற்றும் அச்சங்குட்டம் ஊராட்சியில் மேற்கண்ட பழுதான தார் சாலையை புதுப்பிக்க 25 சதவீதம் கனிமம் மற்றும் சுரங்க துறைநிதியிலிருந்துநிதி ஒதுக்கி தருமாறு கேட்டுக் கொள்வதாக அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது, இதில் மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஏஜிஎம். கணேசன், காஜாமைதீன், தென்காசிமாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், நகர துணைத் தலைவர் தேவராஜன், பொருளாளர் ஈஸ்வரன், சுரண்டை பிரபாகரன், தேவேந்திரன், பிரபு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பெருங்களூர் பிடாரியம்மன் கோயில் தேர்திருவிழா கோலாகலம்



ஆதனக்கோட்டை, மே.18–

பெருங்களூர் ஸ்ரீ பிடாரியம்மன் சித்திரைத் திருவிழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தேரினை வடம்பிடித்து இழுத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூர் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஸ்ரீ பிடாரியம்மன் ஆலய சித்திரை திருவிழா சித்திரை மாதம் 26 – ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கி நடைபெற்று வருகின்றது. திருவிழாவின் முக்கிய நிகழ்வாக பக்தர்கள் காவடி எடுத்தும் அலகு குத்தியும் பால்குடம் எடுத்தும் தங்களது வேண்டுதல்கள் நிறைவேற்றினர், அலங்கரிக்கப்பட்ட தேரில் பிடாரியம்மன் தெற்குவீதி மேலவீதி வடக்குவீதி அய்யனார் கோவில் வீதி உள்ளிட்ட முக்கிய வீதிகளின் வழியாக நடைபெற்ற தேரோட்டத்தில் பிடாரியம்மன் பக்தர்களுக்கு காட்சியளித்தபடி தாரை தப்பட்டை முழங்க நான்கு மாட வீதிகளிலும் தேர் ஆடி அசைந்து பக்தர்கள் வெள்ளத்தில் வர பொங்கல் வைத்தும் தேருக்கு முன் சிதர்தேங்காய் உடைத்தும் ஆட்டுக்கிடாய்வெட்டியும் பிடாரியம்மனை வழிபட்டனர்.

இந்ததேர்திருவிழாவில் பெருங்களூர் சுற்றுவட்டார கிராமங்களான கூத்தாச்சிப்பட்டி, மணவாத்திபட்டி, குட்டகுளவாய்ப்பட்டி, லெட்சுமிபுரம், மட்டையன்பட்டி, வெள்ளவெட்டான்விடுதி, பாப்பாவயல், போரம் மாந்தாங்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர், வாணவேடிக்கை முழங்க இரவு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

# கள்ளச் சாராயம், போதைப் பொருட்களை தொடர்ந்து விற்போர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

**சென்னை , மே.18-**
**கள்ளச் சாராயம் மற்றும் போதைப்பொருட்களை தொடர்ந்து விற்பனை செய்பவர்கள் மீது குண்டர் சட்டத்தில் பாரபட்சமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.**

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் நிகழ்ந்த கள்ளச் சாராய இறப்புகள் குறித்தும், தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், சென்னை தலைமை செயலகத்தில், காவல் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, தமிழக முதல்வர், மாநில அளவில் மதுவிலக்கு தொடர்பாக தகவல் அளிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் 10581 பயன்பாட்டில் உள்ளதை, மக்களிடையே பிரபலப்படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உதவி காவல் கண்காணிப்பாளர் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமலாக்கத் துறை ஆகியோரின் வாட்ஸ்அப் எண்களை அறிவித்து, அதன்மூலம் பெறப்படும் புகார்களை கூடுதல் காவல் துறை இயக்குநர் (மதுவிலக்கு அமலாக்கம்) கண்காணித்து உடனுக்குடன் எடுக்கும் தொடர்நடவடிக்கையை உறுதி செய்திட வேண்டும். இது தொடர்பான அறிக்கையை, ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை அன்று உள்துறைச் செயலாளரின் மூலம் முதல்வரின் அலுவலகத்திற்கு அனுப்பிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் தடுப்பு சம்பந்தமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட அளவில் ஒவ்வொரு திங்கள்கிழமையும், மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) மாவட்ட மேலாளர்



ஆகியோரைக் கொண்டு நடத்திட வேண்டும். இதுதொடர்பாக, தலைமைச் செயலாளர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

பொதுமக்களிடையே கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். இதனை பள்ளிகள், கல்லூரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுயஉதவிக்குழு மகளிரைக் கொண்டு நடத்திட வேண்டுமென்றும்; தொழிற்சாலைகளில். எரிசாராயம் மற்றும் மெத்தனால் பயன்பாட்டைக் கண்காணித்து, அது விஷச் சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை, காவல் துறை மற்றும் உதவி ஆணையர் (கலால்) கண்காணித்திட வேண்டுமென்றும், அதோடு, மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில், கடலோர மற்றும் மலைப்பகுதி மாவட்டங்களில், மாவட்ட அளவிலான மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் சிறப்பாகச் செயல்படும் உயரதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்றும் முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை அந்தத் தொழிலிலிருந்து விடுவித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட அரசின் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் பயன்பெற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்றும், இதனை உள்துறைச் செயலாளர் கண்காணித்திட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளார்.

அதோடு, கள்ளச் சாராயம் மற்றும் போதைப்பொருட்களை தொடர்ந்து விற்பனை செய்பவர்கள் மீது குண்டர் சட்டத்தில் பாரபட்சமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், குற்றத் தடுப்பு நடவடிக்கைகள், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து ஒவ்வொரு மாதமும், உள்துறைச் செயலாளர் மற்றும் காவல் துறைத் தலைமை இயக்குநரின் தலைமையில் காவல் கண்காணிப்பாளர்களின் மாதாந்திரக் கூட்டம் நடத்தப்பட்டு, காவல் துறையின் செயல்பாடுகளைக் கண்காணித்து, முதல்வர் அலுவலகத்திற்கு அறிக்கை அளித்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

காவல்துறை அலுவலர்கள், தங்களது முழு திறமையையும், நீண்ட அனுபவத்தையும் பயன்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பினை பெறும் வகையில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

# மேட்டூர் அணையில் நீர் திறப்பதை வழக்கம்போல் ஜூன் 12 ம் தேதி திறக்க வேண்டும் தமாகா கூட்டத்தில் தீர்மானம்



**தஞ்சை , மே.18-**
**மேட்டூர் அணையில் நீர் திறப்பதை வழக்கம்போல் ஜூன் 12 ம் தேதி திறக்க வேண்டும் என தஞ்சையில் நடைப்பெற்ற தமிழ் மாநில காங்கிரஸ் டெல்டா மாவட்ட விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

தஞ்சை தெற்கு மாவட்ட தமாகா அலுவலகத்தில் டெல்டா மாவட்ட விவசாய அணி நிர்வாகிகள் கூட்டம் மாநில தலைவர் துவார் சி.ரெங்கராஜன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில்:- தமிழகமக்களின் நலனுக்காகவும், தமிழக விவசாயிகளின் நலனுக்காகவும், தொடர்ந்து குரல்கொடுத்து வரும் த.மா.கா மாநில தலைவர் ஜி.கே.வாசனுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கர்நாடகத்தில் தற்போது ஆட்சியமைத்திருக்கும் காங்கிரஸ் அரசு தனது தேர்தல் வாக்குறுதியில் மேகதாது அணைக்கட்டு கட்டப்படும் என்று கூறியிருப்பது தமிழக விவசாயிகள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் ஆளுக்கின்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த சம்பா பருவத்தில் புதுக்கோட்டை, சிவகங்கை,ராமநாதபுரம் போன்ற தென் மாவட்டங்களில் போதிய மழை இல்லாமல் பாதித்த விவசாயிகளுக்கு வேளாண்துறை மூலம் கணக்கெடுத்து இதுவரை தமிழக அரசு இழப்பீட்டை வழங்கவில்லை அதை உடனே வழங்கிட வேண்டும். நெல் குவிண்டாலுக்கு ரூ.3000மும் கரும்புக்கு ரூ.5000மும் வழங்கிட வேண்டும் உரம் விலை கடுமையாக உயர்ந்துள்ள சூழ்நிலையில் விவசாயிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். மேட்டூர் அணை நீர் திறப்பதை வழக்கம்போல் ஜூன் 12 ம் தேதி திறக்க வேண்டும். உள்ளிட்ட 11 தீர்மானங்கள் நிறைவேற்றபட்டது. நிர்வாகிகள்: ராம்மோகன், திருச்செந்தில்,திருப்பதி வாண்டையார்.மணிலா வாசு கோவிந்தராஜன், கைலாசம், கார்த்திக், கணபதி, வேதநாயகம், பத்மநாதன், பார்த்திபன், சாம்பசிவம்,வாசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொன்னமராவதி அருகே கண்மாய் நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச்சேர்ந்த இரண்டு சிறுவர்கள் பரிதாப பலி

பொன்னமராவதி, மே.18-
பொன்னமராவதி அருகே கண்மாய் நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச்சார்ந்த இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தனர்.

திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியம் வைரம்பட்டி கிராமத்தைச்சார்ந்தவர்கள் முருகேசன்,சுதா தம்பதியினர். இத்தம்பதியினர்க்கு 6ம் வகுப்பு பயிலும் லோகநாதன்(12), 2ம் வகுப்பு பயிலும் தருண்சிரி(8) என்ற இரு மகன்கள்இருந்தனர். சிறுவர்கள் இருவரும் திருப்பூரில் பள்ளியில் பயின்று வந்தனர். கோடை விடுமுறைக்காக சொந்த ஊரான வைரம்பட்டி வந்துள்ளனர்.



இந்நிலையில் நேற்று இரண்டு சிறுவர்களும் விளையாட சென்றுள்ளனர், நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால் அவர்களது தாயார் சுதா அப்பகுதியில் தேடியுள்ளார், அப்போது அருகில்உள்ள புதுக்கோட்டை மாவட்டம் ஒலியமங்கலம் ஊராட்சி சேர்வைக்காரன்பட்டி எத்த வேளாண் கண்மாய்க்கரையில் சிறுவர்களது உடை கிடந்துள்ளது. அதில் ஒரு சிறுவனது உடல் கண்மாயில் மிதந்துள்ளது. இதைக்கண்ட சுதா அருகிலுள்ளோர் உதவியுடன் கண்மாயில் தொடர்ந்து தேடியுள்ளார், அப்போது கண்மாயில் மூழ்கி உயிரிழந்த மற்றோரு சிறுவனின் உடலையும் மீட்டு காவல்துறையினர்க்கு தகவல் தெரிவித்தனர், சம்பவ இடத்திற்கு வந்த காரையூர் போலீசார் இரண்டு சிறுவர்கள் உடலையும் கைபற்றி மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்து விசாரித்து வருகின்றனர், ஒரே குடும்பத்தைச்சார்ந்த இரண்டு குழந்தைகளும் நீரில் மூழ்கி இறந்தது அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அறந்தாங்கியில் ஆவின் பால் பண்ணை அமைத்திட மஜக கோரிக்கை விடுத்துள்ளது

**அறந்தாங்கி,மே.18:**
**புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் ஆவின் பால் சேகரிப்பு மற்றும் விநியோகம் செய்யும் பால் பண்ணை அமைத்திட வேண்டும் என மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் முபாரக் அலி கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை நகரில் பால் சேகரிப்பு மற்றும் விற்பனை பண்ணை செயல்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தின் இரண்டாவது நகரமான அறந்தாங்கி முப்பத்தி ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் 40 வேகத்தடைகள் இருப்பதால் ஒரு மணி நேரத்திற்கும் மேலான பயண தூரமாக இருக்கிறது. இந்நிலையில் கோடைகால வெயில் அதிகமாக அடிப்பதாலும்



ஆவின் பால் அறந்தாங்கி வரும்போதே அல்லது வந்தபின் கெட்டுப்போகிறது. அதனால் ஆவின் பால் வாங்குவதில் பொதுமக்களும் விற்பனையாளர்களும் ஆர்வம் காட்டுவதில்லை. எனவே தனியார் நிறுவனங்களின் பால் அறந்தாங்கியில் ஒரு நாளைக்கு பல லட்சம் ரூபாய் அளவுக்கு ஆமோகமாக விற்பனை ஆகிறது. தமிழ்நாடு அரசின் தரமான ஆவின் பால் மக்களுக்கு சென்று சேரவில்லை.

அதேபோல அறந்தாங்கியை சுற்றி ஐநூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ள இவற்றிலிருந்தும் பசும் பால்களை தனியார் பால் நிறுவனங்களே கொல்முதல் செய்து வருகின்றன. இதனால் இயற்கையாக அரசுக்கு வரவேண்டிய வருமானமும் வராமல்போகிறது. இந்நிலையை போக்க தமிழ்நாடு அரசு ஆவின் நிர்வாகம் அறந்தாங்கியில் ஒரு பால்சேகரிப்பு மற்றும் விற்பனை பண்ணையை அமைத்து சுற்று வட்டார பகுதிகளில் ஆவின் விற்பனை பூத்துகளையும் அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என குறிப்பிட்டுள்ளார். அவர்தன் கோரிக்கையை தமிழ்நாடு அரசு தலைமை செயலகம், தமிழ்நாடு ஆவின் நிர்வாகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர். அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ். டி.ராமசந்திரன் ஆகியோருக்கு அனுப்பியுள்ளார்.



மதுரை மாவட்ட கலெக்டராக தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் திப்பணம்பட்டி கிராமத்தை சார்ந்த, எம்.எஸ்.சங்கீதா நியமிக்கப்பட்டுள்ளார்.



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ. டி. சாம்சன் ஐபிஎஸ், தலைமையில் தென்காசி தனியார் திருமண மண்டபத்தில் வைத்து திருநெல்வேலி ஸ்ரீ சக்தி மருத்துவமனை மருத்துவர் வெங்கடேஷ் பாபு எம். பி. பி.எஸ், எம். சி. ஹெச், ஆர் தோ, முன்னிலையில் விபத்தினாலோ அல்லது தாக்குதலுக்கு உள்ளாகி காயம் ஏற்பட்டாலோ அவர்களுக்கு முதலுதவி அளிக்கும் விதமாக ரத்தபோக்கு, எலும்புமுறிவு, மூச்சுத்திணறல் போன்றபாதிப்புகளில்இருந்துஎவ்வாறுமுதலுதவிஅளிக் கவேண்டும்என்பதுகுறித்துபயிற்சிஅளிக்கப்பட்டது.இப் பயிற்சியில்தென்காசிமாவட்டகாவல்நிலையங்களில்இரு ந்து36காவல்நிலையங்களில்இருந்து 150ஆண், பெண் காவலளார்களும் கலந்து கொண்டனர்.

# பத்திரப் பதிவை ரத்து செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பதிவுத் துறை தலைவருக்கு ஐகோர்ட் புதிய உத்தரவு

**சென்னை , மே.18-**
**பத்திரப் பதிவை ரத்து செய்யக் கோரும் விண்ணப்பங்களை கையாள்வது தொடர்பாக விரிவான நடைமுறைகளை வகுத்து அனைத்து அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டும் என பதிவுத் துறை தலைவருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

சென்னை உயர் நீதிமன்றத்தில், கடலூர் மாவட்டம் திருப்பாதிரிபுலியூரைச் சேர்ந்த, ராஜ சுலோச்சனா என்பவர் தாக்கல் செய்த மனுவில், மோசடியாக பதிவு செய்யப்பட்ட நில விற்பனைப் பத்திரத்தின் பதிவை ரத்து செய்யக் கோரி, மாவட்ட பதிவாளருக்கு விண்ணப்பித்திருந்தேன். இது தொடர்பாக கடந்த ஏப்ரல் 17ம் தேதி நான் விண்ணப்பம் அளித்திருந்தேன். அந்த விண்ணப்பத்தின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும்



எடுக்கவில்லை. எனவே, அந்த விண்ணப்பத்தின் மீது விசாரணை நடத்தி பத்திரப் பதிவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம் பிறப்பித்த உத்தரவில், கடந்த ஏப்ரல் 17-ம் தேதி விண்ணப்பம் அளித்து விட்டு, அதன் மீது விசாரணை நடத்தி உத்தரவு பிறப்பிக்க அவகாசம் வழங்காமல் வழக்கு தொடர்ந்தது நல்ல நடைமுறை அல்ல. இது ஊழலுக்கு வழிவகுக்கும். இதே கோரிக்கையுடன் பலர் விண்ணப்பித்திருக்கும் நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவைப் பெற்று, தங்கள் விண்ணப்பத்தின் மீது உத்தரவுகளைப் பெறுவது என்பது மற்ற விண்ணப்பதாரர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, இதுபோன்ற விண்ணப்பங்களுக்கு எண்கள் வழங்கி, அதை பதிவு செய்ய பதிவேடு பராமரிக்க வேண்டும். மூத்த குடிமக்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம். அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவசரமான விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுக்கலாம். அதற்கான காரணங்களை உத்தரவில் குறிப்பிட வேண்டும்.

மேலும், பத்திரப் பதிவை ரத்து செய்வது தொடர்பான விண்ணப்பங்களை கையாளுவது குறித்து விரிவான நடைமுறைகளை வகுத்து, அவற்றை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என அனைத்து அதிகாரிகளுக்கும் பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் வரலாற்று புகழ்மிக்க பழம் பெருமை வாய்ந்த சுயம்புலிங்க சிவன் கோவிலில் உள்ள பெரியநாயகி அம்பாள் வைகாசி விசாகத் திருவிழா துவக்கத்தின் முன்பாக பூச்சொரிதல் விழா நடைபெற்றது. முன்னதாக பெரியநாயகி அம்பாளுக்கு அபிஷே ஆராதனைகள் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்கள் தரிசனம் செய்தனர், திருவரங்குளம் வட்டார பகுதிகளான பூவரசகுடி பாரதியார் நகர் திருவரங்குளம் கிட்டக்காடு கே.வி.எஸ் நகர் மெயின் ரோடு அழகப்பா நகர் நின்ப நேஸ் ஸ்வரன் இடையன் வயல், கோவில்பட்டி, தோப்பு கொல்லை, பெரியநாயகிபுரம், தேத்தாம்பட்டி, பாரதியார் நகர் இந்த குழுவில் இருந்து பக்தர்கள் வாணவேடிக்கை, மேள தாளத்துடன் அலங்கரிக்கப்பட்ட ரதங்களில் பூக்களை கையில் ஏந்தியவாறு ஊர்வலமாக வந்து அம்பாளுக்கு சமர்ப்பணம் செய்தனர், பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# கறம்பக்குடியில் ஒன்றிய நிர்வாகத்தை கண்டித்து பொதுமக்கள் மறியல் போராட்டம்

கறம்பக்குடி, மே.18-
கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கருக்கா குறிச்சி கீழத்தெரு ஊராட்சி நிர்வாகம் மற்றும் கறம்பக்குடி ஒன்றிய நிர்வாகத்தை கண்டித்து அப்பகுதி பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா கருக்காகுறிச்சி கீழத்தெரு ஊராட்சிக்கு உட்பட்ட குறும்பிவயல், கருக்கா குறிச்சி, மஞ்சுகாடு, ஆலங்குளம், மஞ்சுவயல், பணயவயல், வேம்பங்குடி வயல், திருமுருகப்பட்டினம், நல்லாண்டார் கொள்ளை ஆகிய பகுதிகளில் சுமார் 1000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருமாறு அப்பகுதியை சேர்ந்த கிராம மக்கள் கரு.கீழத்தெரு ஊராட்சி நிர்வாகத்திடம் பல முறை கோரிக்கை வைத்திருந்த நிலையில் எந்த ஒரு அடிப்படை வசதிகளும் செய்து தராமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில் கறம்பக்குடி ஒன்றிய அலுவலகத்தில் கோரிக்கை வைத்திருந்தனர்.

ஆனால் வட்டார கிளை ஊராட்சி அலுவலர் கரு. கீழத்தெரு ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஆதரவாக செயல்பட்டு பொது மக்களின் அடிப்படை வசதிகளை செய்து தராமல் காலம் கடத்தி வருவதாகவும் மேலும் தற்போது ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டும் பணி நடைபெற உள்ளதாகவும் ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர் தனக்கு சாதகமான இடத்திலேயே ஊராட்சி மன்ற அலுவலகத்தை அமைக்க உள்ளதாகவும் அப்பகுதி பொதுமக்கள் குற்றம் சாட்டி கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கறம்பக்குடி புதுக்கோட்டை சாலையில் கரு.கீழத்தெரு ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் வட்டார கிளை ஊராட்சி அலுவலரை கண்டித்து அப்பகுதியை சேர்ந்த கிராம பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர், இதனால் போக்குவரத்து ஒரு மணி நேரத்துக்கு மேலாக பாதிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த கறம்பக்குடி வட்டாட்சியர் இராமசாமி சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியதையடுத்து சாலைமறியலை கைவிட்டு கலைந்துசென்றனர்.

# சுதர்சன் பொறியியல் கல்லூரியில் பிரிவு உபசார நிகழ்ச்சி

புதுக்கோட்டை , மே.18-
சுதர்சன் பொறியியல் கல்லூரியில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு ஃபேர்வெல் நடத்தப்பட்டது. விழாவை முன்னிட்டு கல்லூரியில் மரக்கன்று நட்டு இறுதி ஆண்டு மாணவர்கள் தங்களுடைய அன்பை வெளிப்படுத்தினர். அதன் பின்னர் குத்துவிளக்கு ஏற்றி பிரியாவிடை கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மூன்றாம் ஆண்டுமாணவர் தமிழ்ச்செல்வன் துவக்க உரை ஆற்ற கல்லூரி முதல்வர் ஸ்ரீனிவாசன் வாழ்த்துரையில்:- மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் வாழ்க்கையில் என்றும் தளராத மனமும்



தனித்தன்மையுடன் விளங்க வேண்டும் என்றும் கூறினார். பின்னர் மூன்றாம் ஆண்டு மாணவ, மாணவியர் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. ஒவ்வொரு பொறியியல் துறை மாணவர்களும் தங்களுடைய கல்லூரி நினைவுகளை பகிர்ந்து கொண்டதுடன் தங்களின் இளைய மாணவ மாணவியருக்கு தங்கள் உணர்வுபூர்வமான பேச்சால் அனைவரையும் நெகிழ வைத்தனர். இறுதியாக மாணவர் ஷேக் அப்துல்லாவின் நன்றியுறையை தொடர்ந்து கல்லூரி முதல்வர், துணை முதல்வர் சுஜாதா மற்றும் அனைத்து துறை தலைவர்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டு பிரியாவிடை பெற்றுசென்றனர்.

# அகவிலைப்படி உயர்வு அறிவிப்புக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் வரவேற்பு

புதுக்கோட்டை, மே.18-
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசு வழங்கியுள்ளது போன்று 4 சதவிகித அகவிலைப்படி உயர்வினை தமிழ்நாட்டின் ஆசிரியர், அரசு அலுவலர்களுக்கு 01.04.2023 முதல் வழங்கியிருப்பதை பெரிதும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் வரவேற்பதாக மாநில பொதுச்செயலாளர் மன்றம்நா.சண்முகநாதன்



தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, ஒன்றிய அரசு வழங்குவது போன்று வருங்காலங்களில் அகவிலைப்படி உயர்வு அனுமதிக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு உறுதிமொழி அளித்திருப்பதை நம்பிக்கையோடு பெரிதும்வரவேற்கிறோம். அதே போல் தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 01.01.2023 முதல் ஒன்றிய அரசு போல் 4 சதம் அகவிலைப்படி உயர்வினை தமிழ்நாட்டின் ஆசிரியர்-அரசு அலுவலர்களுக்கு வழங்கிட வேண்டும் எனவும் தனது செய்திக்குறிப்பில் தமிழகமுதல்வரை கேட்டுக்கொண்டுள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# செம்பனார்கோயில் ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை அமைச்சர் இ.பெரியசாமி ஆய்வு

செம்பனார்கோயில், மே, 18 –

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.5.04 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.'

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம் காட்டுச்சேரி ஊராட்சியில், காட்டுச்சேரி பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் வீடு புணரமைக்கும் 5 பணிகள் ரூ.2.50 இலட்சம் செலவில் வீடு மறு கட்டுமான 95 பணிகள் ரூ.399 இலட்சம் செலவிலும், இதர 9 பணிகள் ரூ.52.30 இலட்சம் செலவில், கூடுதல் 109 பணிகள் ரூ.4.53 கோடி செலவில், வீடு கட்டும் பணிகளை ஆய்வு செய்தார்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஊரக பகுதியில் உள்ள நீர்நிலைகளை புதுப்பித்தல் கூறுகளின் கீழ் ரூ.6.13 மதிப்பீட்டில் செம்பனார்கோயில் ஒன்றியம் காழியப்பநல்லூர் ஊராட்சி அய்யனார்கோயில் குளம் தூர்வாருதல், வரத்து வாய்க்கால் படித்துறை மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் பணியினையும், திருக்கடையூர் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 2022 – 2023 ஆம் ஆண்டு குழந்தை நேயபள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறை கட்டும் பணி, 2021 – 2022 ஆம் ஆண்டு பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறை கட்டும் பணியினை என ரூ.5.04 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மயிலாடுதுறைமாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில்



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பாரத பிரதமரின் வீடு கட்டும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கத்திட்டம், குழந்தை நேயபள்ளிஉட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய வளர்ச்சித் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், ஊரக வளர்ச்சித் துறை இணை இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், உதவி இயக்குநர் மஞ்சுளா, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் செந்தில்குமார், செம்பனார்கோயில் ஒன்றியக் குழுத் தலைவர் நந்தினி ஸ்ரீதர், சீர்காழி ஒன்றியக் குழுத் தலைவர் கமலஜோதி தேவேந்திரன், குத்தாலம் ஒன்றியக் குழுத் தலைவர் மகேந்திரன், கொள்ளிடம் ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயபிரகாஷ், மயிலாடுதுறை ஒன்றியக் குழுத் தலைவர் காமாட்சி மூர்த்தி, செம்பை ஒன்றிய துணைத் தலைவர் மைனர் பாஸ்கர், சீர்காழி நகர் மன்றத் தலைவலர் துர்கா பரமேஸ்வரி, மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் செல்வராஜ், தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுண சங்கரி, தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட திமுகதுணை செயலாளர் மு.ஞானவேலன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் குத்தாலம் க.அன்பழகன், பால அருள்செல்வம், எம்.எம்.சித்திக், ஒன்றிய செயலாளர் எம். அப்துல்மாலிக், அமுர்த. விஜயகுமார், மங்கை சங்கர், தரங்க பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் துளசி ரேகா ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் விஜயலட்சுமி சுவாமிநாதன், ரெங்கராஜன், கருணாநிதி, ஜெயமாலதி சிவராஜ், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சித் துறையினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குற்றாலம் அருகே ரூ.10 ஆயிரம் லஞ்சம் வாங்கிய குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பாளர் கைது

தென்காசி, மே .18–

தென்காசி மாவட்டம், குற்றாலம் அருகே உள்ள குடியிருப்பு பகுதியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தில் பராமரிப்பு உதவியாளராக பணியாற்றி வருபவர் ராமசுப்பிரமணியன், இவர் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த பணியாளராக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றி வந்த நிலையில், தற்போது பணி நிரந்தரம் பெற்று குற்றாலம் குடியிருப்பு பகுதியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பராமரிப்பு உதவியாளராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில், இவர் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய போது இவருக்கு வழங்க வேண்டிய அரியர் தொகையான ரூ.3 லட்சத்து, 93 ஆயிரத்து 700 ரூபாயை வழங்குவதற்காக, குடியிருப்பு பகுதியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் சீனிவாசன் (வயது 50) என்பவர் ரூ.10 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார்.

அதற்கு, ராமசுப்பிரமணியன் தன்னிடம் பணம் இல்லை எனவும், தன்னுடைய குடும்பம்



மிகவும் கஷ்டத்தில் உள்ளது, ஆகையால் தனக்கு சேரவேண்டிய தொகையை மீட்டு தந்தால் பெரும் உதவியாக இருக்கும் என சீனிவாசனிடம் பலமுறை கேட்டும் அவர் பணம் கொடுத்தால் மட்டுமே உன் பணம் உனக்கு கிடைக்கும் என அதிகாரமாக பல நாட்களாக கூறி வந்துள்ளார், இதுகுறித்து ராமசுப்பிரமணியன், தென்காசி மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் செய்தார். அதன்பேரில், லஞ்ச ஒழிப்பு துணை காவல் கண்காணிப்பாளர் மதியழகன் நேரடி மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் சப்–இன்ஸ்பெக்டர் ரவி, சிறப்புசப்–இன்ஸ்பெக்டர் தெய்வக்கண் ராஜா, ஏட்டுகள் பிரபு, வேணுகோபால், கணேசன் ஆகியோர் அடங்கிய போலீஸ் படையினர் குற்றாலம் அலுவலகத்தில் மறைந்து நின்றனர்.

அப்போது ராமசுப்பிரமணியன் லஞ்சபணமாகரசாயனம் தடவிய ரூ.10 ஆயிரத்தை சீனிவாசனிடம் கொடுத்தபோது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக சீனிவாசனை மடக்கி பிடித்து கைது செய்தனர். பின்னர் அலுவலகம் மற்றும் அவருடைய வீட்டிலும் போலீசார் சோதனை நடத்தினர். மேலும், குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தில் பணியாற்றிவரும் ஊழியர் ஒருவருக்கே, அவருக்கு சொந்தமான பணத்தை கொடுப்பதற்காக உயர் அதிகாரி லஞ்சம் கேட்டு கைதான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதைப்போலவே பல்வேறு அரசு அலுவலகங்களில் லஞ்சம் தலை விரித்து ஆடுவதாக கூறப்படும் நிலையில், இது தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வுடன் புகார் அளித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# அதிகாரிகள், போலீஸாருக்கு தெரியாமல் கள்ளச் சாராய விற்பனை நடந்திருக்க வாய்ப்பில்லை கார்த்தி சிதம்பரம்

மானாமதுரை, மே.18–

அதிகாரிகள், போலீஸாருக்கு தெரியாமல்கள்ளச்சாராய விற்பனை நடந்திருக்க வாய்ப்பில்லை என சிவகங்கை எம்.பி கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

சிவகங்கைமாவட்டம் மானாமதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: ''அதிகாரிகள், போலீஸாருக்கு தெரியாமல்கள்ளச்சாராய விற்பனை நடந்திருக்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே தெரியாமல் இருந்திருந்தால், ஒரே நாளில் கள்ளச் சாராயம் விற்ற 1,500 பேரை கைது செய்திருக்க முடியாது. முதல்வரும், போலீஸாரும் கள்ளச் சாராயத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.



பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழைகள் தான் கள்ளச்சாராயத்தை குடித்து இறந்துள்ளனர். அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் தவறில்லை.

பாஜக வெற்றி பெற்றால் தேசியவாதம் ஜெயித்தது என்றும், மற்றவர்கள் வெற்றி பெற்றால் பிரிவினை வாதம்ஜெயித்ததுஎன்றும் கூறுவது அபத்தமான கருத்து. கர்நாடகாவில் ஊழல் ஆட்சிக்கும், பிரிவினைவாத அரசியலுக்கும் முற்றுப்புள்ளி வைக்க காங்கிரஸை வெற்றி பெற வைத்துள்ளனர். அதை ஜனநாயக ரீதியாக அடக்கத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த 2019-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலை போல் வருகிற 2024-ம் ஆண்டும் தமிழகத்தில் காங்கிரஸ், திமுக கூட்டணி வெற்றி பெறும். தற்போதும் திமுக, காங்கிரஸ் இணக்கமாக உள்ளன. தேர்தல் சமயத்தில் எத்தனை இடங்களில் போட்டியிடுவது குறித்து இரு கட்சி தலைமையும் முடிவு செய்யும். மத்தியில் பாஜக ஆட்சி இனி தேவையில்லை என்பதில் தமிழக மக்கள் தெளிவாக உள்ளனர்'' என்று அவர் கூறினார்.

# சிங்கப்பூரில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர் தூக்கிலிடப்பட்டார்

சிங்கப்பூர், மே .18–

போதைப்பொருள் கடத்திய குற்றத்திற்காக சிங்கப்பூரில் ஒருவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை அந்த நாட்டு அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். சிங்கப்பூரில் கடந்த 3 வார காலத்தில் நிறைவேற்றப்படும் 2-வது மரண தண்டனை இது. இந்த விவகாரம் உலக அளவில் அதிர்வலைகளை எழுப்பி உள்ளது.

கடந்த 2019-ம் ஆண்டில் சுமார் 1.5 கிலோ கஞ்சா கடத்தியதாக அந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. 36 வயதான அந்த நபரின் பெயரை சிங்கப்பூர் அரசு வெளியிடவில்லை. அவரது குடும்பத்தினரின் விருப்பத்தின் பேரில் தனியுரிமை சார்ந்து பெயர் அறிவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை சிங்கப்பூரின் மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு உறுதி செய்துள்ளது. மரண தண்டனைக்கு தடை கோரிய அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக உலக அளவில் கடுமையான சட்டங்களைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாக சிங்கப்பூர் திகழ்கிறது. அந்த நாட்டின் சட்ட விதிகளின்படி சுமார் 500 கிராமுக்கு மேல் கஞ்சா கடத்தலில் ஈடுபட்டால் மரண தண்டனை விதிக்கப்படும்.

கடந்த ஏப்ரல் மாதம் 26-ம் தேதி சுமார் 500 கிலோ கஞ்சா கடத்திய குற்றத்திற்காக சிங்கப்பூரில் 46 வயதான தமிழர் தங்கராஜுக்கு தூக்குத் தண்டனைநிறைவேற்றப்பட்டது. சிங்கப்பூரில் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். என்பதும் குறிப்பிடதக்கது.

# நீலகிரி மாவட்ட 'ஹெலிகாப்டர் சுற்றுலா' திட்டத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை

சென்னை, மே .18–

நீலகிரி மாவட்ட நிர்வாகத்தின் ஹெலி டூரிஸம் சேவை திட்டத்துக்கு தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊட்டியில் நடைபெறும் இந்த ஆண்டிற்கான கோடை விழாவில், 200 ஆண்டு கால வரலாற்றில் முதன்முறையாக ஊட்டியில் உள்ள தீட்டுக்கல்லில் மே 13 முதல் 30ஆம் தேதி வரை ஹெலி டூரிசம் என்ற பெயரில் ஹெலிகாப்டர் சாகச சுற்றுலா நடைபெற உள்ளதாக நீலகிரி மாவட்ட நிர்வாகம் அறிவித்திருந்தது. இந்தத் திட்டத்திற்கு தடை விதிக்க கோரி சென்னை அண்ணா நகரைச் சேர்ந்த பேராசிரியர் முருகவேல் என்பவர் உயர் நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், 'மலைப் பகுதிகளில் சுற்றுலா நோக்குடன் ஹெலிகாப்டர்களை பறக்கவிடுவது மிகவும் ஆபத்தானது. மலைப் பகுதிகளில் ஏற்படும் சிறிய சத்தம்கூட வனப்பகுதிக்குள் அதிக ஒலி அலைகளை ஏற்படுத்தும். இதனால் பொதுமக்கள், யானை உள்ளிட்ட விலங்குகளும், பறவைகளும் பாதிக்கப்படும்.

வனப்பகுதிக்கு அருகில் உள்ள தீட்டுக்கல் பகுதியில் ஹெலிபேட் அமைந்துள்ளதால்,



பறவைகள், வன மற்றும் வீட்டு விலங்குகள் ஆபத்துகளை சந்திக்க நேரிடும். பறவைகள் மோதினால் ஹெலிகாப்டர்கள் கடுமையாக பாதிக்கப்படும். 2021ம் ஆண்டு வானிலை சீற்றத்தால் நீலகிரியில் ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளான சம்பவத்தில் நாட்டின் பாதுகாப்புப் படைத் தலைவர் பிபின் ராவத் உள்ளிட்டோர் பலியான சம்பவம் நடந்துள்ளது.

நீலகிரி வனப்பகுதியில் ஏறத்தாழ 250 கழுகுகள் மட்டுமே உள்ளன. ஹெலிகாப்டர் போக்குவரத்து, மனித நடமாட்டம், வாகன போக்குவரத்து, வேட்டையாடுதல் போன்றவற்றால் அவற்றின் வருகை 35.7 சதவீதம் குறைந்துள்ளது. எனவே வரும் 13ம் தேதி தொடங்கவுள்ள ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்துக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்" என மனுவில் கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் தீர்ப்புக்காக ஒத்திவைத்திருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் அனிதா சுமந்த் மற்றும் எம். நிர்மல் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்த தீர்ப்பில், முறையாக எந்த ஆய்வும் மேற்கொள்ளாமல் ஹெலிகாப்டர் சுற்றுலா சேவை திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. யானைகள், பறவைகள் உள்ளிட்ட உயிரினங்கள் வாழும் நீலகிரி மாவட்டத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

அக்கறையற்ற முறையில் செயல்படுத்தப்படும் இது போன்ற வணிக ரீதியான திட்டங்களால், பல்லுயிர் பெருக்க மண்டலம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது" எனக்கூறி, நீலகிரி மாவட்ட நிர்வாகத்தின் ஹெலி டூரிஸம் சேவை திட்டத்துக்கு தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# நீட் தேர்வினை ரத்து செய்ய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

சென்னை, மே .18–

திமுக ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் ஆகியும் நீட் தேர்வினை ரத்து செய்ய எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்காதது கடும் கண்டனத்திற்குரியது என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- "ஒரே கையெழுத்தில் நீட் தேர்வு ரத்து" என்று மேடைக்கு மேடை முழங்கி அதன்மூலம் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த தி.மு.க., இரண்டு ஆண்டுகள் ஆகியும் நீட் தேர்வினை ரத்து செய்ய எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்காதது கடும் கண்டனத்திற்குரியது. இதன் காரணமாக, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் தனுஷ், அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி செல்வி கனிமொழி, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி சௌந்தர்யா என்ற வரிசையில் தற்போது திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி அருகே நீட் தேர்வு எழுதிய மாணவர் செல்வன் பரமேஸ்வரன் தூக்கிட்டு தற்கொலை செய்து



கொண்டார் என்ற செய்தி மிகுந்த வேதனையை அளிக்கிறது. உயிரிழந்த செல்வன் பரமேஸ்வரன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மனதில் உறுதி வேண்டும்' என்ற மகாகவி பாரதியாரின் வரிகளுக்கு ஏற்ப மாணவ, மாணவியர்கள் மன திடம் படைத்தவர்கள். இருப்பினும், 'ஏமாற்றப்பட்டு விட்டோமே' என்கிற மன உளைச்சல், மருத்துவக் கனவு பலிக்காதோ என்கிற கவலை, நீட் தேர்வில் மதிப்பெண்கள் குறைவாக எடுத்தால் பெற்றோர்களுக்கு நிதிச் சுமை ஏற்படுமோ என்கிற சங்கடம் போன்றவைதான் மன அழுத்தம் அதிகரிப்பதற்கு காரணங்களாகும். இதன் காரணமாக, மன உளைச்சலுக்கு ஆளாகி இதுபோன்ற விபரீத முடிவுகளை மாணவ, மாணவியர் எடுக்கின்றனர்.

மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வு எழுதுவதற்குஎத்தனையோ வாய்ப்புகள் உள்ள நிலையில், வாழ்க்கையில் உயர் கல்வி பயிலுவதற்கு மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாரா பாடப் பிரிவுகள் பல இருக்கின்ற நிலையில், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி என பல்வேறு தேர்வுகளை எழுதி மிக உயர்ந்த அரசு பதவிகளை அடையக்கூடிய வாய்ப்புகள் எல்லாம் மாணவ, மாணவியருக்கு உள்ள நிலையில், இதுபோன்ற விபரீத முடிவுகளை மாணவ, மாணவியர் எடுப்பது மிகுந்த மனவேதனையை எனக்கு அளிக்கிறது. மாணவச் செல்வங்கள் வாழ்வில் வெற்றி பெற எண்ணிலடங்கா வழிகள் இருக்கும் நிலையில், இதுபோன்ற விபரீத முடிவுகளை மாணவ, மாணவியர் எடுக்க வேண்டாம்என்றுகேட்டுக் கொள்கிறேன். மேலும், இதுகுறித்தவிழிப்புணர்வை மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர்களிடம் ஏற்படுத்தவும், நீட் தேர்வினை ரத்துசெய்யவும் அரசுவிரைந்துநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாணவச் செல்வங்கள் எதையும் எதிர்கொள்ளும் மன உறுதியையும், விடா முயற்சியையும் வளர்த்துக் கொண்டால், வெற்றி பெறுவது நிச்சயம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கூவத்தூர் கிராமத்தில் நான்கு வழி சாலை திட்டப் பணிகள் தொடக்க விழா

அரியலூர், மே.18–

ஆண்டிமடம் அருகே, கூவத்தூர் கிராமத்தில், நான்கு வழி சாலை திட்ட பணிகளை, போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தாலுக்கா கூவத்தூர் கிராமத்தில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், விருத்தாசலம் – ஜெயங்கொண்டம் – மதனத்தூர் இருவழிச் சாலையை, 63 கோடி செலவில் கிலோமீட்டர் 21 முதல் 27.600 கி.மீ. தூரத்துக்கு, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்யும் பணியினை, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் உத்திராண்டி, உதவி கோட்டப் பொறியாளர் கருணாநிதி, உதவி பொறியாளர் விக்னேஷ்ராஜ், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் .பரிமளம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# கள்ளச்சாராயம், போதைப் பொருள்களை விற்றால் குண்டாஸ்

# பத்திரப்பதிவு ரத்து : பதிவுத்துறை தலைவருக்கு ஐகோர்ட் உத்தரவு





# நீரில் மூழ்கி: சென்னை, பொன்னமராவதியில் 5 பேர் பலி

சென்னை / புதுக்கோட்டை | 18.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

18.05.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தி. அ. இராமலிங்கம் செட்டியார் , தமிழக வழக்கறிஞர், அரசியல்வாதி, தொழிலதிபர் (பி.1881) (இ.1952)



எம். வி. வெங்கட்ராம் , தமிழக எழுத்தாளர் (பி.1920) (இ.2000)



தேவ கௌடா , இந்தியாவின் 11வது பிரதமர் (பி.1933)



## இன்றைய நினைவு நாள்

பி. எஸ். இராமையா , தமிழக எழுத்தாளர் (பி.1905) (இ.1983)



வேலுப்பிள்ளை பிரபாகரன் , விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்றுவித்தவர், ஈழத்துப் புரட்சியாள (பி.1954) (இ.2009)



கே. ஏ. கிருஷ்ணசாமி , தமிழக அரசியல்வாதி (பி.1932) (இ.2010)



## பன்னாட்டு அருங்காட்சியக நாள்

## உலக எயிட்ஸ் தடுப்பு மருந்து நாள்